Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நற்றிணைத் தலைவியும் அஷ்டவித நாயகியரும்.

ச.பிரியசரவணன்
பரதநாட்டியம்
அழகப்பா பல்கலைக்கழகம்

5

**ஆய்வு நோக்கம்:-**

சங்க இலக்கியங்கள் தொன்மை சான்ற தமிழரின் வாழ்வியற் சிறப்பினைப் புடம்போட்டுக் காட்டுவதில் எப்போதும் முன்னிற்கின்றன. குறிப்பாகத் தமிழரின் குடும்ப அமைப்பு, நடைமுறைகள் என்பன களவியல், கற்பியலுக்கூடாக நன்கு வெளிபடுத்தப்பட்டுள்ளன. இவற்றினை விரிவாக ஆராயும் பொழுது அவற்றின் தனித்துவங்கள் புலப்படும். பெருமைமிகு எம் வரலாற்றினை தற்காலத்தோடும், தற்காலத்து நடைமுறைகளோடும் பொருத்திப் பார்க்கும்பொழுது அவற்றின் சிறப்பும், தனித்தன்மையும் புலனாகும்.

**ஆய்வுச்சுருக்கம்.**

சங்ககால அக இலக்கியங்களுள் ஒன்றாகிய நற்றிணையானது நானூறு அகவற்பாக்களைக் கொண்ட இலக்கியமாகும். நற்றிணையில் 208 பாடல்கள் தோழியின் கூற்றாகவும், 75 பாடல்கள் தலைவி கூற்றாகவும், 73 பாடல்கள் தலைவன் கூற்றாகவும், 11 பாடல்கள் நற்றாய் மற்றும் செவிலி கூற்றாகவும், 8 பாடல்கள் பரத்தையர் கூற்றாகவும், 1 பாடல் கண்டோர் கூற்றாகவும், 1 பாடல் தேர்ப்பாகன் கூற்றாகவும் அமைந்துள்ளது. இவைதவிர ஏனைய பாடல்கள் இன்னார் கூற்று என்று கூற முடியாதவாறு இரண்டு கூற்றுனர்களை உள்ளடக்கியனவாகவுள்ளன. அவ்வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கூற்றுக்களின் வழியாக நற்றிணையில் வெளிப்படுத்தப்படும் தலைவியின் இயல்புகளை நாட்டிய நூல்கள் குறிப்பிடும் அஷ்டவித நாயகியருடன் ஒப்பிடுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:-**
நற்றிணை, அஷ்டவித நாயகி, தலைவன் கூற்று, செவிலி கூற்று, தேற்பாகன் கூற்று.

**நற்றிணையில் ஸ்வாதீன பதிகா :-**

இந்நாயகி நாயகனால் எப்போதும் விரும்பப்பட்டு சந்தோசிக்கப்படுகின்றவள். அவனது அன்பும் ஆதரவும் என்றும் மாறாதென்ற நம்பிக்கையுடையவள்.

**‘நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்**

**என்றும் என்றோள் பிரிபறி யலரே…’** (நற்றிணை - 01)

என்னும் வரிகளில் தலைவி தன் தோழியிடம் தலைவன் என்மீது கொண்ட அன்பினால் தன்னைப் பிரிவதற்கு நினைக்கவும் மாட்டான் என உறுதியாக உரைக்கிறாள். புறவொழுக்கம் பூண்ட தலைவன் தூதுகள் பலவற்றை அனுப்பியும் பயன் தராத நிலையில் வீட்டிற்கு செல்லும் விருந்தினர்களோடு தானும் தலைவியின் வீட்டிற்குச் செல்கின்றான். விருந்திற்கு வந்தோரை இன்முகமும் இன்சொல்லும் கூறி வரவேற்றலே மனையறம் என்பதால் அது சிறிதும் குறையாமல் தலைவி தலைவனையும் வரவேற்று முகம் திரிந்து நோக்கின் விருந்து அகம் குழைந்து நீங்கும் என்ற அச்ச மிகுதியால் விருந்தினரைப்போலவே தலைவனையும் உபசரிக்கின்றாள்.

**‘எமக்கே வருகதில் லம்ம விருந்தே சிவப்பான்று**

**சிறுமுள் ளெயிறு தோன்ற**

**முறுவல் கொண்ட முகங்காண் கம்மே’** (நற்றிணை - 120)

புறவொழுக்கம் பூண்டு வந்த தலைவனையும் இன்முகங்கொண்டு உபசரிப்பது எப்போதும் மலர்ந்த முகத்துடன் இருக்கும் ஸ்வாதீனபதிகாவின் இயல்பினோடு ஒத்திருப்பதனைக் காணலாம். மேலும் தலைவி வறுமைபட்ட போது அவளின் தந்தை உணவுப்பொருட்களை கொடுத்து விடுகின்றார் தலைவியோ அதனை வேண்டாம் என விலக்கி சிறிதானாலும் தன் கணவன் தரும் பொருளில் வாழ்வதே மாண்புடைமை என்னும் பண்புகொண்டவளாகக் காணப்படுகின்றாள்.

**‘கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**

**கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்…’** (நற்றிணை - 110)

இதனூடாக கணவனையே கண்கண்ட தெய்வமாகக் காணும் ஸ்வாதீனபதிகாவின் இயல்பினைக் காணக்கூடிதாகவுள்ளது.

**நற்றிணையில் வாசகஸஜ்ஜிகா :-**

இந்நாயகி, நாயகன் வரும் சமயமறிந்து தன்னையும் வீட்டையும் அலங்கரித்து நாயகனுடனான கூடலுக்கு சித்தமாயிருப்பாள். இதே பண்பினைக் காட்டும் வகையிலான நற்றிணைப் பாடலொன்றில் கடமைக் குறித்துப் பிரிந்து சென்ற தலைவன் தான் ஏற்றுக்கொண்ட வினையைச் சிறப்பாக முடித்து புகழோடு திரும்பி வரும் செய்தி கேட்டுத் தலைவி இன்பம் மிகுந்து காணப்படுவாள் என வருகின்றது. மேலும்,

**‘மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்**

**சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய…’** (நற்றிணை - 42)

எனும் வரிகளில் தலைவன் வினை முடித்துத் திரும்பி வருவதனை ஏவலர்கள் மூலம் அறிந்தத்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தலைவி நீராடி தலைக்கு எண்ணெய்ப்பூசி ஒப்பனை செய்து காத்திருப்பாள் எனவும் ஒப்பனையின் இடையிலேயே தலைவன் வர அவனை கட்டியனைத்துத் தன் அன்பினை வெளிப்படுத்துவாள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை வாசகஸஜ்ஜிதாவின் இயல்பினோடு ஒத்திருப்பதனைக் காணலாம்.

**நற்றிணையில் விரஹோத்கண்டிதா:-**

குறித்த காலத்தில் நாயகன் வராமையினால், காலதாமதத்தை சகிக்க முடியாது வருந்தும் இயல்புடையவள் இந்நாயகியாவாள். எப்போதும் வாடிய முகத்துடனும், வேலைகளில் பிரியமற்றும், கண்ணீருடன் காணப்படுவாள்.

காதலால் மெய் மெலிவுற்று தலைவியின் கைவளையல்கள் கழன்று விழுவதனைக் கண்ட அவள் தந்தை தொடியை அவளது கையில் மாட்டிவிடுகின்றார். இதனால் மெலிவினால் வளையல் கழன்றாலும் தொடியைத் தாண்டி விழப்போவதில்லை. இவ்விதம் செய்த என் தந்தையைப் போற்ற வேண்டும் என நற்றிணையில் தலைவியானவள் குறிப்பிடுகின்றாள். இதனை,

> **'தோட்பழி மறைக்கும் உதவிப்**
> **போக்கில் பொலந்தொடி செறீஇ யோனே'** (நற்றிணை - 136)

என்னும் வரிகள் குறித்து நிற்கின்றன. பிரிவாற்றாமையால் வாடும் நெஞ்சினை அடக்கியாள வேண்டும் எனத்தோழி உரைக்க நெஞ்சம் என்னிடம் இருந்தால் தானே அப்படி செய்ய முடியும் என் மெலிவுகண்டு என் ஆற்றாமையைத் தலைவனுக்கு உணர்த்துவதற்காய் அது அவனிடம் சென்றுவிட்டது என்பாள். தலைவன் உடன் இருந்தாலும் மாலைப் பொழுது வரின் பசலை நோய் மிகும் இயல்புடையவள் நான். அவ்வாறிருக்க இவர் பிரிந்தால் வன்துயர் அதிகரித்து பசலைநோய் மீறி நுதல் ஒளியற்றும்போகும். அயலார் அலர் தூற்றுவர் நான் என் செய்குவன் என்று புலம்புவாள்.

கணவன் பிரிந்து சென்றப்பின்னர் கனவிலும் நனவிலும் அவனே தோன்றுகின்றான். அவ்வாறு தலைவனைக் கனவில் கண்டு திகைத்தெழுந்ததனை,

> **'உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல்.....**
> **நெல்லியம் புளிச்சுவை கனவி யாஅங்கு...'** (நற்றிணை 87)

என, வெளவால் நெல்லிக்கனி உண்பதுபோல் கனவு கண்டு, விழித்ததும் பொய்யென்று அறிந்து வருந்துதல் போல நானும் வருந்தி மெலியலுற்றேன் என்பாள்.

**நற்றிணையில் விப்ரலப்தா:-**

இந்நாயகி நாயகனால் ஏமாற்றப்பட்டவள் ஆவாள். குறித்த இடத்திற்கு, குறித்த காலத்தில்

தலைவன் வராமையால் ஏமாற்றமும், அவமானமும் அடைவாள்.

**அடைகரை மாஅத் தலங்குசினை ஒலிப்பத்**
**தளிர்கவின் எய்திய தண்ணறும் பொதும்பிற்**
**சேவலொடு கெழீஇய செங்கண் இருங்குயில்...**
**இணருகு புடைவதன் றலையும் புணர்வினைக்**
**ககன்றோர் மன்றநம் மறந்திசி னோரென...'** (நற்றிணை - 118)

மாமரங்கள் புதுத்தளிர் ஈன்று பொலிந்து நிற்கும் வேளை அதன் சினைகளில் குயிற்சேவல் தன் பெடையுடன் கூடி பாடல் பாடும் வேனிற் காலம் வரேன் என்ற தலைவன் காலம் கடந்து வராமல் முதுவேனிற் காலமும் வந்துவிட்டதை மாவின் பூங்கொத்துக்கள் உதிர்ந்ததையும், காய்கள் தோன்றிக்கனியத் தலைப்பட்டதையும் சுட்டிக்காட்டி தலைவன் தன்னை மறந்துவிட்டதாகக் கூறி வருத்தமுறுவாள்.

**நற்றிணையில் கண்டிதா:-**

நாயகனைக் கண்டிக்கும் நாயகி இவளாவாள். வேறொருத்தியுடன் கூடிவிட்டுவரும் நாயகனை ஏளனமாய்ப் பார்த்து நையாண்டி செய்து தனது கோபத்தை சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்துவாள்.

பரத்தையிடம் சென்று வந்ததனை அறிந்து தலைவி கோபம் கொள்ள உன்னைத்தவிர வேறு பெண்ணை அறியேன் என சாதிப்பான். அப்போது தலைவி அவன் கூறியதைப் பொய்யெனக்கூறி உன் மார்பில் படுத்துறங்கிய காதலியைக்கண்டேன். நீர் சூட்டிய மலர் மணம் வீச, நின்னைக் கூடியதால் சோர்ந்து, ஆடைகளும், வளையல்களும் அசைய பார்வையை எம்பால் வீசி இத்தெருவழியே சென்றாள். மார்பில் அணிகலன்கள் இருந்தாலும் நின்னைப்பிரிந்து தொய்யில் எழுதாமல் வாடுகிறாள் அவளிடமே செல் என கோபம் கொண்டு பேசுவாள். இதனை,

**'ஐய குறுமகட் கண்டிகும் வைகிய**
**மகிழ்நன் மார்பில்துஞ்சி அவிழிணர்த்**
**தேம்பாய் மராஅம் கமழும் கூந்தல்**
**துளங்கியல் அசைவரக் கலிங்கம் துயர்வரச்**
**செறிதொடி தெளிர்ப்ப வீசி மறுகில்**
**பூப்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்**
**சென்றனள்...'** (நற்றிணை - 20)

எனும் பாடலில் காணலாம். பரத்தையிடமிருந்து மீண்டு தலைவியிடம் வருவதற்காய்ப் பாணனைத் தூதனுப்புகிறான் தலைவன். முகம் சிவக்க, இதழ்கள் துடிக்க, கண்கள் சிவக்கப்

பாணனைப் பார்த்து வெகுண்டு தலைவி மனையாளோடு வாழமுடியாமல் பரத்தையை நயந்துரையும் அன்னியன் என்றும், பரத்தையொருத்தியைக் காட்டி இப்போது இவள் தான் அவன் மனையாள் என்றும் ஊரார்க் கூறுகின்றனர். அத்தகையவர் பொருட்டு நீ இங்கு வந்தாயோ? என சினம் மிகுந்து கூறுவாள்.

**நற்றிணையில் கலஹாந்தரிதா :-**

இந்த நாயகி நாயகனிடமிருந்து கலகத்தால் பிரிந்தவள். கணவனை கோபித்துத் துரத்திப் பின் மயங்குகின்றவள்.

நற்றிணையில் இரவுக்குறி, பகற்குறி மறுத்த தலைவி நாயகன் காதில் விழும்படிதோழியிடம்,

**‘என்ன மகன்கொல் தோழி தன்வயின்**
**ஆர்வம் உடையராகி மார்பணங் குறுநரை அறியாதோனே.’** (நற்றிணை 94)

என ‘என் மார்பு தரும் வேட்கை நோயால் வருந்தும் இயல்பை அறியாமலும் தன் இயல்பை உணராமலும் ஒழுகுபவன் என்ன இயல்புடைய ஆண்மகனோ எனக்குத் தெரியவில்லையே’ என்று கூறி கடிந்துகொள்கிறாள்.

தலைமகன் புறவொழுக்கம் அறிந்த தலைவியின் உள்ளத்தில் பொறாமை காராணமாக ஊடலும் புலவியும் பொங்கி எழுந்தன. மாசுமருவற்ற தன் காதலன் மனத்தினில் பரத்தையொருத்தி இடம்பெற்றாள் எனின் அது தம் குலத்திற்கு மாசு என்று அறிந்து கண் சிவந்து வாயிதழ் துடித்து மேனி வியர்த்து மிக்க சினங்கொண்டு உறைவாளாயினாள். (நற்றிணை) 120 தலைவனின் புறத்தொழுக்கத்துக்கு துணையாகும் பாணன் வரக்காணின் வெகுளி மிகுந்து காணப்பட்டு அவனைத் தன் மனையறம் புகவிடாள். தலைவனுக்காகத் தூது வந்த பாணனை கோபித்துத் துரத்துவதனையும் கலஹாந்தரிகாவின் இயல்பாகக் கொள்ள முடியும்.

**நற்றிணையில் ப்ரோஷிதபர்த்ருகா:-**

வியாபாரம் காரணமாகவோ, அன்றி வேறு காரணங்களுக்காகவோ வெளியூர் சென்ற கணவனை பிரிந்திருக்கும் நாயகி இவளாவாள். நாயகன் தூரதேசத்திலிருப்பதால் தனித்திருப்பவாளாக இருப்பாள்.

வினையினை மேற்கொள்ளுதல் தலைமக்கள் வாழ்க்கைக்கு புகழும் இன்பமும் நல்கும் என்பதால் வினைமேற்கொண்டு சென்ற தலைவன் வரும் வரையில் தலைவி பிரிவாற்றிக் காத்திருப்பாள். வேந்தனுடன் போருக்குச் சென்ற கணவன் வினைமுற்றி வெற்றிவாகை சூடி வருதலினும் தன குடிக்கு வீறு தருவது வேறொன்றில்லை என்ற கருத்தினால் மறமாண்புடைய அம்மடந்தை அவன் பிரிவை ஆற்றி அவனைப்பற்றிய நினைவு எழும்போதெல்லாம் புதல்வனைக் கண்டும் அவன் சொல் கேட்டும் விளையாட்டை வியந்தும் தன் மனைக்குரிய கடன்களை மகிழ்வுடன்

செய்திருந்தாள். தலைவன் பிரியும்போது தலைவனின் திண்மையையும், பொருளின் இன்றியமையாமையையும் எடுத்துரைத்து தோழியானவள் தலைவியை ஆற்றுவிப்பாள். அதனையேற்றத் தலைவி,

**‘இரந்தோர் மாற்றல் ஆற்றா**
**இல்லோர் வாழ்க்கை வல்லா தோரே’** (நற்றிணை - 84)

அதாவது வெயில் மிகுந்த சுரத்தின் வழியே தலைவன் பொருளின் மீதுள்ள வேட்கையினால் போகவில்லை தன்னிடம் இல்லையென்று வருபவர்க்கு இன்மை தீர்த்து இனிதாக வாழ வைப்பது தானே தலைவர்க்கு அழகு அதற்காகவே போகிறார் என்பாள்.

தலைவன் பிரிந்தமையினால் தலைவியின் உடல் மெலிந்து தொடி நெகிழ்வதாயிற்று. அவளுடைய புதல்வன் அதற்குரிய காரணம் வினவி இன்புறுத்துவான். தான் உற்ற மெலிவுக்குரிய ஏதுவை அவற்கு உரைக்கலாகாமையின் முறுவலித்து நோக்கி முத்தி தந்து அவனை மகிழ்விப்பாள்.

**‘செம்பொற் கழல்தொடி நோக்கிப் புதல்வன்**
**கவவுக்கொள் இன்குரல் கேட்டொறும்**
**அவவுக்கொள் மனத்தேம் ஆகிய எமக்கே’** (நற்றிணை - 212)

ஒருகாலைக்கொரு கால் அவளுடைய உள்ளம் தலைவனுடைய பிரிவை நினைந்த வழிக் கலக்கமும் புதல்வன் மொழிக் கேட்ட வழி உவகையும் மாறி மாறி எய்துவதாயிற்று.

**நற்றிணையில் அபிசாரிகா :-**

இந்நாயகி கணவனை நோக்கி நகர்பவள் அல்லது தலைவனைத் தானிருக்கும் இடத்தினை நோக்கி அழைக்கிறவளாவாள். தூரதேசம் இருக்கும் கணவனிடம் செல்பவள்.

நற்றிணையில்,

**‘அஞ்சுவல் வருதல் ஒல்லுமோ நினக்கே’** (நற்றிணை - 162)

என்னும் தலைவனது கூற்று, கடமையின் சிறப்புணர்ந்தமையின் வினை வேண்டாதெனத் தடுத்தல் காதலறத்துக்கு மாண்பன்மையென்றறிந்த தலைவி தலைமகனை நெருங்கித் தன்னையும் உடன்கொண்டு செல்லுமாறு இரந்து நிற்பதனை வெளிப்படுத்தி நிற்கின்றது.

**முடிவுரை :-**

இதுவரைப்பார்த்த பாடல்களுக்கூடான உதாரணங்களைக் கொண்டு பார்க்கையில் அஷ்டவித நாயகியர் அனைவரினது இயல்புகளும் வெளிப்படும் வகையிலான பாடல்கள் நற்றிணையில் இடம்பெறுவதனைக்காணலாம். ஆய்வுக்கட்டுரையின் சுருக்கம் கருதி மிகவும் குறுகிய பரப்பிலேயே இவை விளக்கப்பட்டுள்ளன. எனினும் இத்தகைய ஆய்வுகள் பேரளவில் இடம்பெற்று இவற்றின் ஒப்புமைகளை வெளிப்படுத்துவதன் மூலம் சங்க இலக்கியப்

பாடல்களையும் பதங்கள், ஜாவளிகளின் வகையாக, மிகையாகப் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் உருவாகும். தமிழோடு ஆடலை தரணியெங்கும் ஏற்றுவோம்.

**உசாத்துணை :-**


- மாங்குடி துரைராஜ ய்யர், (1997), ஸ்வபோத பரத நவநீதம், மூர்த்தி பப்ளிகேஷன்ஸ், சென்னை - 28.
- ஔவை துரைசாமி, (2009), உரைவேந்தர் தமிழ்த்தொகை - 14, இனியமுது பதிப்பகம், சென்னை.
- ஔவை துரைசாமி, (2009), உரைவேந்தர் தமிழ்த்தொகை - 15, இனியமுது பதிப்பகம், சென்னை.
- ஔவை துரைசாமி, (2009), உரைவேந்தர் தமிழ்த்தொகை - 16, இனியமுது பதிப்பகம், சென்னை.